## உடல் உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையத்தின் உறுப்பினர் செயலராக என்.கோபாலகிருஷ்ணன் நியமனம்



**சென்னை:** தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்றுசிகிச்சை ஆணையத்தின் உறுப்பினர் செயலராக மருத்துவர் என்.கோபாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக சுகாதாரத் துறைச் செயலர் ககன்தீப் சிங் பேடி வெளியிட்டுள்ள அரசாணையில், "தமிழ்நாடு உடல்உறுப்பு மாற்று சிகிச்சை ஆணைய உறுப்பினர் செயலராக இருந்த மருத்துவர் காந்திமதி, அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். உறுப்பு மாற்று ஆணையத்தின் புதிய உறுப்பினர் செயலராக முதுநிலைமருத்துவ நிபுணரும், சென்னை ராஜீவ்காந்திஅரசு பொது மருத்துவமனையின் சிறுநீரகவியல் துறை இயக்குநருமான மருத்துவர்என்.கோபாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்" என்று தெரிவித்துள்ளார்.

மருத்துவத் துறையில் 32 ஆண்டு அனுபவம் கொண்ட என்.கோபாலகிருஷ்ணன், மதுரை ராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரியில் எம்பிபிஎஸ் மற்றும் எம்.டி. படிப்புகளை நிறைவு செய்து, சென்னை மருத்துவக் கல்லூரி சிறுநீரகத்

துறையில் டி.எம். பட்டம் பெற்றார். பிரிட்டன் ராயல் கல்லூரியில் எம்ஆர்சிபி அங்கீகாரம் மற்றும் கவுரவப் பட்டம் பெற்ற இவர், 2011-ல்ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை சிறுநீரகவியல் துறைதலைவராக பொறுப்பேற்றார்.

ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக் கண்காணிப்பாளராகவும், சென்னை மருத்துவக் கல்லூரி துணை முதல்வராகவும் கூடுதல் பொறுப்பில் இருந்துள்ளார். கடந்த 12 ஆண்டுகளில் அவரது ஒருங்கிணைப்புடன் 650-க்கும்மேற்பட்டசிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் ராஜீவ் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கரோனா காலத்தில் ஒருங்கிணைப்பு அதிகாரியாக சேவையாற்றிய அவர், சிறுநீரகவியல் தொடர்பாக பல்வேறு சர்வதேச ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்து, பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

சென்னையில் 2008-ல் விபத்தில் சிக்கி மூளைச் சாவு அடைந்த ஹிதேந்திரன் என்ற இளைஞரின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டது. இதையடுத்து, உடல் உறுப்பு தானம் குறித்த மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டது. தமிழக அரசு ‘மூளைச்சாவு உடல்உறுப்பு மாற்று திட்டத்தை’ உருவாக்கியது. அடுத்த சில ஆண்டுகளில், தமிழ்நாடு உடல்உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையம் உருவானது.

## தமிழ்நாடு சுற்றுலா விருதுகளுக்கு ஆகஸ்ட் 15 வரை விண்ணப்பிக்கலாம்



**சென்னை:** சுற்றுலாத் துறை இயக்குநர் சந்தீப் நந்தூரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சுற்றுலாவின் வெற்றியாளர்கள், பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் புதிய யுக்திகளைக் கையாளுபவர்களுக்கு ஆண்டுதோறும் செப்.27-ம் தேதி உலக சுற்றுலா தினத்தில் சுற்றுலா விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டுக்கான சுற்றுலா விருது செப்.27-ம் தேதி உலக சுற்றுலா தினத்தில் வழங்கப்பட இருக்கிறது.

அதன்படி, தமிழ்நாட்டுக்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், சிறந்த உள்நாட்டுச் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், சிறந்த பயண பங்குதாரர், சிறந்த விமான பங்குதாரர், சிறந்த தங்குமிடம், சிறந்த உணவகம், சிறந்த மாவட்டம், சுத்தமான சுற்றுலாத் தலம், சமூக ஊடகங்களில் அதிக அளவில் தாக்கத்தை ஏற்படுத்துபவர், சிறந்த சுற்றுலா வழிகாட்டி உட்பட 17 வகையான விருதுகள் வழங்கப்பட உள்ளன.

எனவே, விருதுகளுக்குத் தகுதியானவர்கள், விருதுகளுக்கான விண்ணப்பங்களை www.tntourismawards.com என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, அதைப் பூர்த்தி செய்து ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

EVA

**பள்ளிகளில் சிறுதானிய உணவுகள் அறிமுகம் செய்ய மாநில அரசுகளுக்கு மத்திய அரசு வலியுறுத்தல்**



**புதுடெல்லி:** பள்ளிகளில் மாணவ, மாணவியருக்கு சிறுதானிய உணவு வகைகளை அறிமுகம் செய்ய வேண்டும் என்று மாநில அரசுகளை மத்திய அரசு வலியுறுத்தி உள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் பரிந்துரையை ஏற்று இந்த ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது. அதன்பின், பல்வேறு நாடுகளில் முக்கிய பிரமுகர்களும் சிறுதானிய உணவுகளை சாப்பிட்டு கருத்து தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து சிறுதானியங்களின் ஏற்றுமதி மையமாக இந்தியாவை மாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. உள்நாட்டிலும் சிறுதானியங்களை ஊக்கப்படுத்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக மத்திய கல்வித் துறை சார்பில் அனைத்து மாநில அரசுகளுக்கும் யூனியன் பிரதேச அரசுகளுக்கும் அண்மையில் கடிதம் அனுப்பப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது:

நாடு முழுவதும் செயல்படும் பள்ளிகளில் சிறுதானிய உணவு வகைகளை அறிமுகம் செய்ய வேண்டும். பள்ளி கேன்டீன்களில் சிறுதானிய உணவுகளை

சமைத்துபரிமாற வேண்டும். இந்த உணவுவகைகள் குறித்து மாணவ, மாணவியரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இதுதொடர்பாக அந்தந்த மாநில அரசுகள், யூனியன் பிரதேச அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட கல்வித் துறை அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கல்வித் துறை வட்டாரங்கள் கூறும்போது, “இந்தியாவின் பரிந்துரையின் பேரில் இந்த ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில் சிறுதானியங்களை மாணவ, மாணவியரிடையே பிரபலப்படுத்த மத்திய கல்வித் துறை சார்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மாநில அரசுகளும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். சில மாநிலங்கள் போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை. பள்ளிகளில் சிறுதானியங்களை அறிமுகப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை கோரியிருந்தோம். சில மாநில அரசுகள் இதுவரை விவரங்களை சமர்ப்பிக்கவில்லை" என்று தெரிவித்தன.

**இளையோர் வில்வித்தை | தங்கம் வென்றார் இந்தியாவின் பிரியன்ஷ்**

**லிமெரிக்**: இளையோருக்கான உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் பிரியன்ஸ் தங்கப் பதக்கம் வென்றார்.

அயர்லாந்தின் லிமெரிக் நகரில் நடைபெற்று வரும் இந்த தொடரில் ஆடவருக்கான 21 வயதுக்கு உட்பட்டோருக்கான காம்பவுண்ட் பிரிவில் இந்தியாவின் பிரியன்ஷ் இறுதி சுற்றில் சுலோவேனியாவின் அல்ஜாஸ் பிரெங்குடன் மோதினார். இதில் பிரியன்ஷ் 147-141 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

முன்னதாக 18 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் காம்பவுண்ட் பிரிவு இறுதி சுற்றில் இந்தியாவின் அதிதி தங்கம் வென்றார். இறுதி சுற்றில் அவர், 142-136 என்ற புள்ளிகள் கணக்கில் அமெரிக்காவின் லீன் டிரேக்கை வீழ்த்தினார். இந்த தொடரில் இதுவரை இந்தியா 5 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலம் என 9 பதக்கங்கள் வென்றுள்ளது.